# Volume 21

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

அவரோடேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்டபொழுது, அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான். (லூக்கா 14:15)


**THE SCRIPTURE FEAST MINISTRIES**

**REV: PAUL BENJAMIN**

**FOUNDER AND AUTHOR**

**REGD OFFICE:**

**NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM, GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 . TAMIL NADU, SOUTH INDIA**

**Mobile : + 91 94456 35860 +91 73583 23277**

**Web : www.scripturefeast.net, Blog : www.scripturefeast.info**

**Email: scripturefeast@gmail.com**

**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

**PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து ஊழியங்கள்

1.பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்

2.பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்

3.தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.

4.பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.

5.வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்

6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.

7.தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.

8.வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.

TSFM

For the Pre - Destinate Conquering

@ One among the 1000 generation

The Bride in 1000 years kingdom

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தொன்று

## உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

## பொருளடங்கம்

1-0 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில்; தன்னுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவை பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக , பரலோகத்தில் தன்னுடைய வலதுபாரிசத்தில் தேவனாக ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்

2-0 தேவனால் பரலோகத்தில் உருவாக்கப்பட்ட தேவதூதர்களும் தேவனைப்போல நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிறதன் மூலம் நித்தியமாக இருப்பதற்காக; தேவதூதர்களுக்கு தேவனுடைய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது.

3-0 உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராகிய கிறிஸ்து, மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்து, தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிகளுக்காக பூலோகத்திலுள்ளவைகள்

பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று:-.

4-0 பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, தேவனுடைய சத்தியத்தைக் குறித்து சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்:-

5-0 பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, தேவனுடைய சத்தியத்தைக் குறித்து சாட்சியிடுகிறவர்களில் மூவரில் முதலாம் ஆனவரான, பிதாவாகிய, சத்திய ஆவியாகிய தேற்றரவாளன்: தேவனுடைய சத்தியத்தை வெளிப்படுத்துவதற்காக, கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. மூன்று காரியங்கள்:-

6-0 பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, தேவனுடைய நீதியைக் குறித்து சாட்சியிடுகிறவர்களில், மூவரில் இரண்டாம் ஆனவரான வார்த்தையாகிய கிறிஸ்துவின் ஆவியானவர்: சத்தியத்தை வெளிப்படுத்துவதற்காக, கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. மூன்று காரியங்கள்:-

7-0 பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, தேவனுடைய நீதியைக் குறித்து சாட்சியிடுகிறவர்களில், மூவரில் மூன்றாம் ஆனவரான பரிசுத்த ஆவியானவர் தேவநீதியை வெளிப்படுத்துவதற்காக, கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. மூன்று காரியங்கள்:-

8-0 தேவனால் பூமியில் உருவாக்கப்பட்ட ஆதாமும் தேவனைப்போல நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிறதன் மூலம் நித்தியமாக இருப்பதற்காக; ஆதாமிற்கு ஏதேன் தோட்டத்தின் பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது:-

9-0 பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்த மனுஷனுடைய ஆவி,ஆத்துமா,சரீரத்தில் தேவன் ஒப்புக்கொடுக்கிற ஒப்புரவாக்குதலின் உபதேசம் மற்றும் ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான தேவனுடைய நீதியின் கிரியைகள்:-

10-0 பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்த மனுஷனுடைய ஆவி,ஆத்துமா,சரீரத்தில் தேவன் ஒப்புக்கொடுக்கிற ஒப்புரவாக்குதலின் உபதேசம் மற்றும் ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்:-

## மதிப்புரை / Foreword

*JESUS NEVER FAILS*
*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*

**APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men

(Heb. 12.14)'

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

**Pastor . A. THOMASRAJ** President
**G.SUKUMAR SAMUEL** Hon.secretary
**K.R. SELWIN** Treasurer

*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj
President
Apostolic Christian Assembly

No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583
Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று,தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக் குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள்:- | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள்:- |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக் கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னு டைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலை யில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில் தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில் அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை.

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந் திக்கும்படி தேவ

வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார்.

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள் வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக் கொள்வது விசேஷ இரட்சிப்பு

விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்:-

1.ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு/ தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது.

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு / தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது.

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்/ மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம்/ தீமையை வெறுத்து, நன் மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் / உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து/ இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழா வில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல்/தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.

பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபையினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப்

பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவர் சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக் கப்பட்டு வருகிறது.

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.

## ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம்.

தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான

சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிறதினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

தரிசனம் :- கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

எழுத்தின்படி பொருள் :- காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

ஆவியின்படி பொருள் :- தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளினால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

ஞான அர்த்தத்தின்படி பொருள் :- கணினியின் கடந்தோடுகிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகை யிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து வின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத் திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொரு ளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகு வதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம். அல்லேலூயா, ஆமென்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தொன்று

## உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

## பொருளடங்கம்-1

1-0 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில்; தன்னுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவை பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக , பரலோகத்தில் தன்னுடைய வலதுபாரிசத்தில் தேவனாக ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்

1-1 ஒன்றான மெய்த்தேவனாகிய நித்திய சத்தியமுள்ள பிதாவானவர் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்:-

1-2. ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில்; தன்னுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவை பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக , பரலோகத்தில் தன்னுடைய வலதுபாரிசத்தில் தேவனாக ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்

1-3 ஒன்றான மெய்த்தேவனாகிய நித்திய சத்தியமுள்ள பிதாவானவரை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக , பரலோகத்தில் பிதாவானவரின்

வலதுபாரிசத்தில் தேவனாக ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரேபேறான குமாரனாகிய கிறிஸ்துவே பிதாவை வெளிப்படுத்தினார்.

1-4 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, கிறிஸ்து; உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராக பரலோகத்தில் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி,. உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக தம்மைத்தாமே தாழ்த்தினார்:-

1-5 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக வருகிற சத்துருக்களை பிதாவாகிய உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், பரலோகத்தில் பிதாவாகிய நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கிறிஸ்து விண்ணப்பம்பண்ணினார்:-

1-1 ஒன்றான மெய்த்தேவனாகிய நித்திய சத்தியமுள்ள பிதாவானவர் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்:-

Joh 4:19 அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.
Joh 4:20 எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள்.

Joh 4:21 அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது.

Joh 4:22 நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.

Joh 4:23 உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது

இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.

Joh 4:24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

Joh 4:25 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.
Joh 4:26 அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.

Isa 57:15 நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.

Isa 57:16 நான் எப்போதும் வழக்காடமாட்டேன்; நான் என்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை; ஏனென்றால், ஆவியும், நான் உண்டுபண்ணின ஆத்துமாக்களும், என் முகத்துக்கு முன்பாகச் சோர்ந்துபோகுமே.

Joh_4:19-26,Isa_57:15-16; Joh_1:18, Joh_6:46;Exo_33:20; Deu_4:12; Isa_66:1-2; Jer_23:23-24; 1Ti_6:13-16; Act_17:24-28; Psa_139:1-10; 1Ki_8:27; 2Ch_6:18; Psa_11:4,Mat_5:34-35; Mat_23:21-22; Pro_30:4; 1Ch_29:11; Eph_1:3; Joh_20:17, Isa_63:3-6; 1Co_15:20-28;1Ti_1:17; Deu_6:4; Isa_44:6; Mar_12:29-33; Joh_17:3; Rom_3:29-30, Rom_10:12; 1Co_8:6; Gal_3:20; Eph_4:6

1-2. ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில்; தன்னுடைய ஒரேபேறான குமாரனாகிய கிறிஸ்துவே பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக , பரலோகத்தில் தன்னுடைய வலதுபாரிசத்தில் தேவனாக ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்:-

.Joh 1:1 ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

Joh 1:2 அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

Joh 1:3 சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.
Joh 1:4 அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.
Joh 1:5 அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.

Joh 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

Psa 2:1 ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்?
Psa 2:2 கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி:

Psa 2:3 அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள்.
Psa 2:4 பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்.

Psa 2:5 அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார்.
Psa 2:6 நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணி வைத்தேன் என்றார்.

Psa 2:7 தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்;
Psa 2:8 என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்;

Psa 2:9 இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார்.
Psa 2:10 இப்போதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள்.
Psa 2:11 பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்.

Psa 2:12 குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

Joh_1:1-8,Joh_1:9-14, Joh_1:18, Joh_6:46;Joh_16:28,Joh_17:3; Rom_3:29-30, Rom_10:12; 1Co_8:6; Gal_3:20; Eph_4:6,Psa_2:1-6, Psa_2:7-12, Pro_8:22-32 ;

Gen_1:1-4, Gen_1:26-28; Psa_33:6, Heb_11:3; 2Pe_3:5-6, Psa_102:25-26; Isa_45:12, Isa_45:18; Col_1:12-16;Col_1:17-21; Heb_1:1-6,Heb_1:7-14,

Heb_3:1-4;Heb_11:27; Rev_4:11,Job_38:1-11; Job_38:12-22, Job_38:23-32,

Job_38:33-41, Psa_104:1-10;Psa_104:11-20; Psa_104:21-30;Psa_104:31-35; Isa_40:1-8,Isa_40:9-15,Pro_30:4,

1-3 ஒன்றான மெய்த்தேவனாகிய நித்திய சத்தியமுள்ள பிதாவானவரை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக , பரலோகத்தில் பிதாவானவரின் வலதுபாரிசத்தில் தேவனாக ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரேபேறான குமாரனாகிய கிறிஸ்துவே பிதாவை வெளிப்படுத்தினார்:-.

Joh 6:26 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Joh 6:27 அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்.

Joh 6:28 அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.
Joh 6:29 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

Joh 6:30 அதற்கு அவர்கள்: அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்?

Joh 6:31 வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக்கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி, நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள்.

Joh 6:32 இயேசு அவர்களை நோக்கி: வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
Joh 6:33 வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்.
Joh 6:34 அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும் என்றார்கள்.

Joh 6:35 இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.
Joh 6:36 நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்.

Joh 6:37 பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.
Joh 6:38 என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.

Joh 6:39 அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது.

Joh 6:40 குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.

Joh 6:41 நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து:
Joh 6:42 இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான் என்றார்கள்.

Joh 6:43 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்களுக்குள்ளே முறுமுறுக்கவேண்டாம்.
Joh 6:44 என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.
Joh 6:45 எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்.

Joh 6:46 தேவனிடத்தினின்று வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை, இவரே பிதாவைக் கண்டவர்.
Joh 6:47 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
Joh 6:48 ஜீவ அப்பம் நானே.

Joh 6:49 உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்.
Joh 6:50 இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே.
Joh 6:51 நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.

Joh_1:18, Joh_6:26-34 ;Joh_6:35-42 ;Joh_6:43-50 ;Joh_6:51-58, ;Joh_16:28,Pro_8:22-32; Rom_1:20; Exo_33:20; Deu_4:12; Mat_11:27; Luk_10:22;

1Jo_4:12, 1Jo_4:20,: Joh_5:37, Joh_8:19, Joh_14:9-10, Joh_15:24; Joh_7:29, Joh_8:55; Mat_11:27; Luk_10:21-24, Joh_1:14-18, Joh_3:14-18; 1Jo_4:9, Gal_3:19-22 , 1Ti_2:4-7, Heb_8:4-8, Heb_9:14-17, Heb_12:24,Rom_8:14; 2Co_6:17-18; Gal_3:26, Gal_4:6; 2Pe_1:4; 1Jo_3:1,Isa_8:13-18;Heb_2:10-16,

1-4 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, ஒரேபேறான குமாரனாகிய கிறிஸ்து; உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராக பரலோகத்தில் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி,. உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக தம்மைத்தாமே தாழ்த்தினார்:-

Php 2:5 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;
Php 2:6 அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,
Php 2:7 தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.
Php 2:8 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.
Php 2:9 ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,
Php 2:10 இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,
Php 2:11 பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

Col 1:12 ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்,
Col 1:13 இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

Col 1:14 [குமாரனாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.
Col 1:15 அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

Col 1:16 ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

Col 1:17 அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.
Col 1:18 அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

Col 1:19 சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,
Col 1:20 அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

Rev_5:1-7, Rev_5:8-14, Phi_2:5-11; Heb_1:1-3,Col_1:12-16 ; Col_1:17-20;Rev_5:9, Rev_5:12, Rev_6:16, Rev_7:9-17, Rev_12:11, Rev_13:8, Rev_17:14, Rev_21:23, Rev_22:1, Rev_22:3; Isa_53:7-8; Joh_1:29, Joh_1:36; Act_8:32; 1Pe_1:19-20

Pro_8:23; Mic_5:2; Rom_16:25-26; Eph_1:4, Eph_3:9, Eph_3:11; 2Ti_1:9-10; Tit_1:2-3; Rev_13:8

1-5 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக வருகிற சத்துருக்களை பிதாவாகிய உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், பரலோகத்தில் பிதாவாகிய நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கிறிஸ்து விண்ணப்பம்பண்ணினார்:-

Psa 110:1 கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்.

Psa 110:2 கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார்; நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகைசெய்யும்.

Psa 110:3 உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்.

Psa 110:4 நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்.

Psa 110:5 உம்முடைய வலதுபாரிசத்திலிருக்கிற ஆண்டவர், தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களை வெட்டுவார்.
1Co 15:22 ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

1Co 15:23 அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.
1Co 15:24 அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்.

1Co 15:25 எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகை செய்யவேண்டியது.
1Co 15:26 பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.

1Co 15:27 சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது.

1Co 15:28 சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.

Psa_110:1-5; Heb_1:1-3,Heb_1:13, Heb_10:10-17,Eph_1:17-24,Heb_8:1-5, Heb_12:1-2, 1Pe_3:15-22, Mat_22:42-45; Mar_12:35-37, Mar_14:60-62, Mar_16:19, Luk_22:67-69, Luk_20:41-44,1Co_15:22-28, Act_5:31,Act_7:53-56; Act_2:32-36 , , Rom_8:30-34, Col_3:1-4,

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தொன்று

## உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

## பொருளடங்கம்-2

2-0 தேவனால் பரலோகத்தில் உருவாக்கப்பட்ட தேவதூதர்களும் தேவனைப்போல நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிறதன் மூலம் நித்தியமாக இருப்பதற்காக; தேவதூதர்களுக்கு தேவனுடைய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது.

2-1 கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவருடைய பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளையும் தேவன் உண்டாக்கினார்

2-2 கர்த்தருடைய வாயின் சுவாசத்தினால் அவருடைய பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளாகிய நான்கு செட்டைகளையுடைய கேருபீன்களையும் ஆறு செட்டைகளையுடைய சேராபீன்களையும் தேவன் உண்டாக்கினார்

2-3 தேவனால் பரலோகத்தில் உருவாக்கப்பட்ட தேவதூதர்களும் தேவனைப்போல நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிறதன் மூலம்

நித்தியமாக இருப்பதற்காக; தேவதூதர்களுக்கு தேவனுடைய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது.

2-4 தேவன் : தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார்: இவர்கள் தேவனுடைய இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு, தேவனால் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்:-

2-5 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக, முதலாவது எழும்பி வருகிற தேவதூதன் சத்துரு / விரோதி தலைவனாகவும், அவனை பின்தொடர்கிற தேவதூதர்கள் சத்துருக்களாகவும்/ விரோதிகளாகவும் பரலோகத்தில் அடையாளங்கள் வெளிப்பட்டது:-

2-6 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக, சத்துருக்களின் அடையாளங்கள் வெளிப்பட்டபோது: சத்துருக்களை நித்திய சத்தியத்திற்கு பாதபடியாக்கிப் போடுவதற்காக, பரலோகத்தில் பிதாவினுடைய வலதுபாரிசத்திலிருந்து தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது

2-7 பரலோகத்தில் பிதாவினுடைய வலதுபாரிசத்திலிருந்து, சத்துருக்களை நித்திய சத்தியத்திற்கு பாதபடியாக்கிப் போடுவதற்காக , தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டு சத்துருக்களின் ஆடம்பரமும், வாத்தியங்களின் முழக்கமும் பாதாளத்தில் தள்ளப்பட்டது

2-8 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்திலும் பூமியிலும் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக, சத்துருக்கள் எழும்புகிறதினால் நித்திய சத்தியத்திற்கு ஆபத்து வருங்காலத்திலும், சத்துருக்கள் மூலம் கலகமும் யுத்தமும் வருங்காலத்திலும், பிரயோகிக்கும்படி நான் உறைந்த மழையையும், கல்மழையையும், பண்டசாலைகளுக்குள்ளே வைத்துவைத்திருக்கிறேன்:-.

2-1 கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவருடைய பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளையும் தேவன் உண்டாக்கினார்

Psa 103:17 கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.
Psa 103:18 அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது.
Psa 103:19 கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.
Psa 103:20 கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள்.
Psa 103:21 கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்.
Psa 103:22 கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல கிரியைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்; என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.

Psa_33:1-6,Psa_104:25-30; Gen_2:7; Job_26:13, Job_33:4; Joh_20:22 Deu_4:19; Psa_148:1-6, Psa_148:7-14, Gen_28:12, Gen_32:1-2; 1Ki_22:18-19; Job_38:1-7;
Psa_68:17, Psa_103:20-21, Isa_6:1-3; Eze_3:12; Dan_7:9-10; Luk_2:13-14;
Luk_15:10; Eph_3:9-11; Heb_1:14; 1Pe_1:12; Rev_5:11-14, Job_1:6, Job_2:1; Psa_104:1-7;Rev_14:10; Mat_25:31-34,Mar_8:38, Luk_9:26,

2-2 கர்த்தருடைய வாயின் சுவாசத்தினால் அவருடைய பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளாகிய நான்கு செட்டைகளையுடைய கேருபீன்களையும் ஆறு செட்டைகளையுடைய சேராபீன்களையும் தேவன் உண்டாக்கினார்

Isa 6:1 உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது.
Isa 6:2 சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து;

Isa 6:3 ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.
Isa 6:4 கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது.

Psa 33:1 நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்; துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும்.
Psa 33:2 சுரமண்டலத்தினால் கர்த்தரைத் துதித்து, பத்து நரம்பு வீணையினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்.
Psa 33:3 அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; ஆனந்த சத்தத்தோடே வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள்.
Psa 33:4 கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது.
Psa 33:5 அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார்; பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது.
Psa 33:6 கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.

Isa_6:1-3; Eze_1:1-5, Eze_1:6-10, Eze_10:11-15; Eze_10:16-22, Num_7:89, Exo_25:19 , Exo_37:8 , 2Sa_22:11, 1Ki_6:24-27 , 2Ch_3:11-12 , Psa_18:10, Eze_9:3, Eze_28:14 , Eze_28:16, Eze_41:18, Rev_4:7-8, Deu_33:1-2; 1Ki_22:19; Psa_68:17; Mat_25:31; Heb_12:22-24; Jud_1:6; Dan_7:9-10 ;Job_1:6, Job_2:1; Psa_103:17-22; Mat_18:10, Mat_25:31; Heb_1:14, Rev_9:1-5, Rev_9:6-12,Rev_9:13-17, Rev_9:18-21,

2-3 தேவனால் பரலோகத்தில் உருவாக்கப்பட்ட தேவதூதர்களும் தேவனைப்போல நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிறதன் மூலம் நித்தியமாக இருப்பதற்காக; தேவதூதர்களுக்கு தேவனுடைய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது.

Rev 21:17 அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது.

Psa 148:1 அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்; உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்.
Psa 148:2 அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்; அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்.

Psa 148:3 சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள்; பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள்.
Psa 148:4 வானாதி வானங்களே, அவரைத் துதியுங்கள்; ஆகாயமண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள்.
Psa 148:5 அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது.
Psa 148:6 அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார்; மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார்.
Psa 148:7 பூமியிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்; மகாமச்சங்களே, சகல ஆழங்களே,
Psa 148:8 அக்கினியே, கல்மழையே, உறைந்த மழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே,
Psa 148:9 மலைகளே, சகல மேடுகளே, கனிமரங்களே, சகல கேதுருக்களே,
Psa 148:10 காட்டுமிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே,
Psa 148:11 பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே,
Psa 148:12 வாலிபரே, கன்னிகைகளே, முதிர் வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள்.
Psa 148:13 அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது.
Psa 148:14 அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா.

Rev_21:17,1Co_6:2-3, Heb_2:14-16, Job_4:18; Mat_25:41; Rev_20:8-10,Rev_20:2-3, , Rev_20:14-15, Rev_19:20 , Rev_14:10; Mat_25:31-34,Mar_8:38, Luk_9:26,

Mat_25:41, Mat_25:46, Job_15:15-16, Job_25:5-6; 2Pe_2:1-6, 2Pe_2:7-12, Jud_1:5-9, Rev_14:10; Mat_25:31-34,Mar_8:38, Luk_9:26,

.

2-4 தேவன் : தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார்: இவர்கள் தேவனுடைய இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு, தேவனால் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்:-

Heb 1:1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்,
Heb 1:2 இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.
Heb 1:3 இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.
Heb 1:4 இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.
Heb 1:5 எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?
Heb 1:6 மேலும், தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்.
Heb 1:7 தேவதூதரைக்குறித்தோ: தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது.
Heb 1:8 குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.
Heb 1:9 நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் என்றும்;
Heb 1:10 கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது;
Heb 1:11 அவைகள் அழிந்துபோம்; நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழைமையாய்ப்போம்;
Heb 1:12 ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்; நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது.

Heb 1:13 மேலும், நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?
Heb 1:14 இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?

Heb_1:1-7; Heb_1:8-14; 1Pe_1:12;Gen_19:1 , Gen_19:15, Gen_28:12, Gen_32:1, Psa_78:49, Psa_91:11, Psa_148:2,Rev_9:1-6 ,Rev_9:13-15, Psa_103:20-21, Psa_104:4; Isa_6:1-3,Psa_103:20-21, Mat_4:6, Mat_4:11, Mat_13:39, Mat_13:41-42, Mat_13:49-50, Mat_16:27, Mat_18:10, Mat_24:30-31 , Mat_24:36, Mat_25:31, Mat_26:53, Mar_1:13, Mar_8:38, Mar_12:25, Mar_13:27, Mar_13:32, Luk_2:15, Luk_4:10, Luk_9:26, Luk_15:8-10 , Luk_24:22-23 , Joh_1:51, Joh_20:12, Act_7:53, Rom_8:36-39, 1Co_4:9, 1Co_11:10, 1Co_13:1, Gal_3:19, Col_2:14-19, 2Th_1:5-10, 1Ti_3:16, 1Ti_5:21, Heb_2:1-7, Heb_2:8-13, Heb_2:14-16, Heb_12:20-25, Heb_13:1-2, 1Pe_1:5-10, 1Pe_1:11-15, 1Pe_3:18-25,

2-5 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக, முதலாவது எழும்பி வருகிற தேவதூதன் சத்துரு / விரோதி தலைவனாகவும், அவனை பின்தொடர்கிற தேவதூதர்கள் சத்துருக்களாகவும்/ விரோதிகளாகவும் பரலோகத்தில் அடையாளங்கள் வெளிப்பட்ட்து:-

தேவதூதர்கள் தேவனுடைய நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்தாமல், தீமையின் வல்லமைகள் வெளிப்பட்டபோது; தேவனுடைய நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிற, தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வழிமுறைகளும் வெளிப்பட்டு, தேவனுடைய நித்திய சத்தியத்தை நிலைநிறுத்தினது.

தேவனால் பரலோகத்தில் உருவாக்கப்பட்ட தேவதூதர்களும், தேவனைப்போல நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிறதன் மூலம் பரலோகத்தில் பரிசுத்த தூதர்களாகவே நித்தியமாக இருப்பதற்காக;

தேவதூதர்களுக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய பிரமாணங்களை விட்டு விலகி: நித்திய சத்தியத்திற்கு சத்துருவாகவும் / விரோதியாகவும் நித்திய சத்தியத்திற்கு இணையாகவும் உள்ள பொய்யான மாயைகளை பிந்தொடர்ந்து;

நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிறவர்களுக்கு விரோதமாக முதலாவது எழும்பின தேவ தூதன் பொய்யனும் பொய்களுக்குப் பிதாவானவனுமாக அடையாளம் பரலோகத்தில் வெளிப்பட்டது, அவனை பின்தொடர்கிற தேவதூதர்கள் சத்துருக்களாகவும்/ விரோதிகளாகவும் அசுத்தமுள்ள தேவதூதர்களாக பரலோகத்தில் அடையாளங்கள் வெளிப்பட்டது

Joh 8:44 நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

Isa 14:12 அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!

Isa 14:13 நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,

Isa 14:14 நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.

Isa 14:15 ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.

Isa 14:16 உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப்பார்த்து, உன்னைக்குறித்துச் சிந்தித்து: இவன்தானா பூமியைத் தத்தளிக்கவும், ராஜ்யங்களை அதிரவும் செய்து,

Isa 14:17 உலகத்தை வனாந்தரமாக்கி, அதின் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள்.

Isa 14:18 ஜாதிகளுடைய சகல ராஜாக்களும், அவரவர் தங்கள் அறையிலே மகிமையோடே கிடத்தப்பட்டிருக்கிறார்கள்.

Isa 14:19 நீயோ அழுகிப்போன கிளையைப்போலவும், பட்டயக்குத்தால் கொலையுண்டவர்களின் உடுப்பைப்போலவும், ஒரு குழியின் கற்களுக்குள்ளே கிடக்கிறவர்களைப்போலவும், காலால் மிதிக்கப்பட்ட பிணத்தைப்போலவும், உன் கல்லறைக்குப் புறம்பாய் எறிந்துவிடப்பட்டாய்.
Isa 14:20 நீ அவர்களோடே அடக்கம் பண்ணப்படுவதில்லை; நீ உன் தேசத்தைக் கெடுத்து உன் ஜனத்தைக் கொன்றுபோட்டாய்; தீமைசெய்கிறவர்களுடைய சந்ததி ஒருபோதும் பேர்பெறுவதில்லை.
Isa 14:21 அவன் புத்திரர் எழும்பித் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, உலகத்தைப் பட்டணங்களால் நிரப்பாதபடிக்கு, அவர்கள் பிதாக்களுடைய அக்கிரமத்தினிமித்தம் அவர்களைக் கொலைசெய்ய ஆயத்தம் பண்ணுங்கள்.
Isa 14:22 நான் அவர்களுக்கு விரோதமாய் எழும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; பாபிலோனுடைய பேரையும், அதில் மீந்திருக்கிறதையும், புத்திரனையும் பௌத்திரனையும் சங்கரிப்பேனென்று கர்த்தர் சொல்லுகிறார்.

Eze_28:1-6, Eze_28:7-10 , Eze_28:11-14, Eze_28:15-19; Isa_10:5-10, Isa_10:11-15, Isa_10:16-20, Isa_10:21-25, Isa_10:26-30,Isa_10:31-34, Psa_2:1-8, Psa_2:9-12, Isa_14:3-8; Isa_14:9-15; Isa_14:16-20; Isa_14:21-27; Joh_8:44,Dan_8:10-12, 2Th_2:1-4,; 2Th_2:5-10; 2Th_2:11-17,Mat_25:31-34,_; Job_4:18,Luk_10:18;

Joh_8:44; 1Jo_3:8; Job_15:15-16, Job_25:5-6; 2Pe_2:1-6, 2Pe_2:7-12, Jud_1:5-9, ,Rev_12:7 , Rev_14:10; Mat_25:31-34,Mar_8:38, Luk_9:26,

2-6 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக, முதலாவது எழும்பி வருகிற தேவதூதனும் , அவனை பின்தொடர்கிற தேவதூதர்கள் வெளிப்பட்டபோது: நித்திய சத்தியத்திற்கு சத்துருக்களை பாதபடியாக்கிப் போடுவதற்காக , பரலோகத்தில் பிதாவினுடைய வலதுபாரிசத்திலிருந்து தேவனுடைய நியாயத்தீர்ப்பும் வெளிப்பட்டது:-

ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக, முதலாவது எழும்பி வருகிற தேவதூதன் சத்துரு / விரோதி தலைவனாகவும், அவனை பின்தொடர்கிற தேவதூதர்கள் சத்துருக்களாகவும்/ விரோதிகளாகவும் பரலோகத்தில் அடையாளங்கள் வெளிப்பட்டபோது: நித்திய சத்தியத்திற்கு சத்துருக்களை பாதபடியாக்கிப் போடுவதற்காக , பரலோகத்தில் பிதாவினுடைய வலதுபாரிசத்திலிருந்து தேவனுடைய நியாயத்தீர்ப்பும் வெளிப்பட்டது

Eze 28:11 பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:
Eze 28:12 மனுபுத்திரனே, நீ தீரு ராஜாவைக்குறித்துப் புலம்பி, அவனை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்.
Eze 28:13 நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.
Eze 28:14 நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்.
Eze 28:15 நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்.
Eze 28:16 உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ்செய்தாய்; ஆகையால் நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப்போடுவேன்.
Eze 28:17 உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப்போடுவேன்; ராஜாக்கள் உன்னைப் பார்க்கும்படி உன்னை அவர்களுக்கு முன்பாக வேடிக்கையாக்குவேன்.
Eze 28:18 உன் அக்கிரமங்களின் ஏராளத்தினாலும், உன் வியாபாரத்தின் அநீதத்தினாலும் உன் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினாய்; ஆகையால் உன்னைப் பட்சிப்பதாகிய ஒரு அக்கினியை நான் உன் நடுவிலிருந்து புறப்படப்பண்ணி, உன்னைப்பார்க்கிற எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் உன்னைப் பூமியின்மேல் சாம்பலாக்குவேன்.
Eze 28:19 ஜனங்களில் உன்னை அறிந்த அனைவரும் உன்னிமித்தம் திகைப்பார்கள்; மகா பயங்கரமாவாய்; இனி ஒருபோதும் இருக்கமாட்டாய் என்று உரைக்கிறார் என்று சொல் என்றார்.

Eze_28:1-6, Eze_28:7-10 , Eze_28:11-14, Eze_28:15-19; Isa_10:5-10, Isa_10:11-15, Isa_10:16-20, Isa_10:21-25, Isa_10:26-30,Isa_10:31-34, Psa_2:1-8, Psa_2:9-12,

Isa_14:3-8; Isa_14:9-15; Isa_14:16-20; Isa_14:21-27; Jer_4:22-27, Hag_2:5-9, Hag_2:21-23 ; Heb_12:25-28, Isa_34:4; Psa_74:1-8, Psa_74:9-16,Psa_74:17-23,

2-7 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக, சத்துருக்கள் வெளிப்பட்டபோது: பிதாவினுடைய வலதுபாரிசத்திலிருந்து, சத்துருக்களை நித்திய சத்தியத்திற்கு பாதபடியாக்கிப் போடுவதற்காக , தேவனுடைய நியாயத்தீர்ப்பும் வெளிப்பட்டு சத்துருக்களின் ஆடம்பரமும், வாத்தியங்களின் முழக்கமும் பாதாளத்தில் தள்ளப்பட்டது

Isa 14:5 கர்த்தர் துஷ்டரின் தண்டாயுதத்தையும், அரசாண்டவர்களின் செங்கோலையும் முறித்துப்போட்டார்.
Isa 14:6 உக்கிரங்கொண்டு ஓயாத அடியாய் ஜனங்களை அடித்து, கோபமாய் ஜாதிகளை அரசாண்டவன், தடுப்பாரில்லாமல் துன்பப்படுத்தப்படுகிறான்.
Isa 14:7 பூமிமுழுதும் இளைப்பாறி அமைந்திருக்கிறது; கெம்பீரமாய் முழங்குகிறார்கள்.
Isa 14:8 தேவதாரு விருட்சங்களும், லீபனோனின் கேதுருக்களும், உன்னிமித்தம் சந்தோஷப்பட்டு, நீ விழுந்து கிடந்தது முதற்கொண்டு எங்களை வெட்டவருவார் ஒருவரும் இல்லை என்று சொல்லுகிறது.
Isa 14:9 கீழே இருக்கிற பாதாளம் உன்னிமித்தம் அதிர்ந்து, உன் வருகைக்கு எதிர்கொண்டு, பூமியில் அதிபதிகளாயிருந்து செத்த இராட்சதர் யாவரையும் உன்னிமித்தம் எழுப்பி, ஜாதிகளுடைய எல்லா ராஜாக்களையும் அவர்களுடைய சிங்காசனங்களிலிருந்து எழுந்திருக்கப்பண்ணுகிறது.
Isa 14:10 அவர்களெல்லாரும் உன்னை நோக்கி: நீயும் எங்களைப்போலப் பலட்சயமானாயோ? எங்களுக்குச் சமானமானாயோ? என்று சொல்லுவார்கள்.
Isa 14:11 உன் ஆடம்பரமும், உன் வாத்தியங்களின் முழக்கமும் பாதாளத்தில் தள்ளுண்டுபோயிற்று; புழுக்களே உன் படுக்கை, பூச்சிகளே உன் போர்வை.
Isa 14:12 அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!

Isa 14:13 நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,
Isa 14:14 நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.
Isa 14:15 ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.
Isa 14:16 உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப்பார்த்து, உன்னைக்குறித்துச் சிந்தித்து: இவன்தானா பூமியைத் தத்தளிக்கவும், ராஜ்யங்களை அதிரவும் செய்து,
Isa 14:17 உலகத்தை வனாந்தரமாக்கி, அதின் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள்.
Isa 14:18 ஜாதிகளுடைய சகல ராஜாக்களும், அவரவர் தங்கள் அறையிலே மகிமையோடே கிடத்தப்பட்டிருக்கிறார்கள்.
Isa 14:19 நீயோ அழுகிப்போன கிளையைப்போலவும், பட்டயக்குத்தால் கொலையுண்டவர்களின் உடுப்பைப்போலவும், ஒரு குழியின் கற்களுக்குள்ளே கிடக்கிறவர்களைப்போலவும், காலால் மிதிக்கப்பட்ட பிணத்தைப்போலவும், உன் கல்லறைக்குப் புறம்பாய் எறிந்துவிடப்பட்டாய்.
Isa 14:20 நீ அவர்களோடே அடக்கம் பண்ணப்படுவதில்லை; நீ உன் தேசத்தைக் கெடுத்து உன் ஜனத்தைக் கொன்றுபோட்டாய்; தீமைசெய்கிறவர்களுடைய சந்ததி ஒருபோதும் பேர்பெறுவதில்லை.
Isa 14:21 அவன் புத்திரர் எழும்பித் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, உலகத்தைப் பட்டணங்களால் நிரப்பாதபடிக்கு, அவர்கள் பிதாக்களுடைய அக்கிரமத்தினிமித்தம் அவர்களைக் கொலைசெய்ய ஆயத்தம் பண்ணுங்கள்.
Isa 14:22 நான் அவர்களுக்கு விரோதமாய் எழும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; பாபிலோனுடைய பேரையும், அதில் மீந்திருக்கிறதையும், புத்திரனையும் பௌத்திரனையும் சங்கரிப்பேனென்று கர்த்தர் சொல்லுகிறார்.

Isa_14:3-8; Isa_14:9-15; Isa_14:16-20; Isa_14:21-27; Jer_4:22-27, Hag_2:5-9, Hag_2:21-23 ; Heb_12:25-28, Isa_34:4; Psa_74:1-8, Psa_74:9-16,Psa_74:17-23,

2-8 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்திலும், பூமியிலும் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக, சத்துருக்கள் எழும்புகிறதினால்: கலகமும் யுத்தமும் வருகிற காலத்தில் சத்துருக்களை நித்திய சத்தியத்திற்கு பாதபடியாக்கிப்

போடுவதற்காக நான் உறைந்த மழையையும், கல்மழையையும், பண்டசாலைகளுக்குள்ளே வைத்துவைத்திருக்கிறேன்:-.

நோவாவின் காலத்தில் இருந்த உலகம் தேவனுடைய கோபாக்கினையினால், ஜலப்பிரளயத்தின் மூலம் தேவன் அழித்தார்: அது போல ஆதாமின் காலத்திற்கு முன்னே இருந்த உலகம் தேவனுடைய கோபாக்கினையினால், ஜலப்பிரளயத்தின் மூலம் தேவன் அழித்தார்.

1 நோவாவின் காலத்தில் மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தேவனுடைய கோபாக்கினையினால், ஜலப்பிரளயத்தின் மூலம் தேவன் உலகம் அழித்தார்:-

நோவாவின் காலத்தில் பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இருந்த உலகம் தேவனுடைய கோபாக்கினையினால், ஜலப்பிரளயத்தின் மூலம் தேவன் அழிந்தார்

ஆதாம் முதல் நோவா வரையுள்ள பத்து தலைமுறைகளில் மனுஷர் பூமியின்மேல் பெருகத் துவக்கி, அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது: தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்;

பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள். இவர்கள் அந்நாட்களில் பூமியிலே இராட்சதர்களாக இருந்தார்கள்

இந்த மூன்று வகையான வம்சங்களும், தேவனுடைய பிரமாணங்களுக்கு விரோதமாக, சத்துருக்களாக எழும்பி: கலகமும் யுத்தமும் செய்தபோது; சத்துருக்களை நித்திய சத்தியத்திற்கு பாதபடியாக்கிப் போடுவதற்காக தேவன் உறைந்த மழையையும், கல்மழையையும், உருவாக்கி

தேவனுடைய கோபாக்கினையினால், நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தின் மூலம் தேவன் உலகத்தை அழித்தார்:

2Pe 3:5 பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும்,
2Pe 3:6 அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்.

2Pe 3:7 இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.

Jud 1:6 தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்.

Jud 1:7 அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

Jud 1:8 அப்படிப்போலவே, சொப்பனக்காரராகிய இவர்களும் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, மகத்துவங்களைத் தூஷிக்கிறார்கள்.

Jud 1:9 பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று சொன்னான்.

Jud 1:10 இவர்கள் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள்; புத்தியில்லாத மிருகங்களைப்போலச் சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

2 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக,தேவதூதர்கள் சத்துருக்களாக வெளிப்பட்டபோது: ஆதாமின் காலத்திற்கு முன்னே இருந்த உலகமும் தேவனுடைய கோபாக்கினையினால், ஜலப்பிரளயத்தின் மூலம் தேவன் அழித்தார்:-

தேவனால் பரலோகத்தில் உருவாக்கப்பட்ட தேவதூதர்களும் தேவனைப்போல நித்திய சத்தியத்தை நிலைநிறுத்துகிறதன் மூலம் நித்தியமாக இருப்பதற்காக; தேவதூதர்களுக்கு தேவனுடைய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது.

ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியத்தை பரலோகத்தில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு விரோதமாக,தேவதூதர்கள் சத்துருக்களாக வெளிப்பட்டபோது: பரலோகத்தில் பிதாவினுடைய வலதுபாரிசத்திலிருந்து, சத்துருக்களை நித்திய சத்தியத்திற்கு பாதபடியாக்கிப் போடுவதற்காக , தேவனுடைய நியாயத்தீர்ப்பும் வெளிப்பட்டு சத்துருக்களின் ஆடம்பரமும், வாத்தியங்களின் முழக்கமும் பாதாளத்தில் தள்ளப்பட்டது

பரலோகத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு விரோதமாக, தேவதூதர்கள் சத்துருக்களாக எழும்பி: கலகமும் யுத்தமும் செய்தபோது; சத்துருக்களை நித்திய சத்தியத்திற்கு பாதபடியாக்கிப் போடுவதற்காக தேவன் உறைந்த மழையையும், கல்மழையையும், உருவாக்கி ஆதாமின் காலத்திற்கு முன்னே இருந்த உலகம் தேவனுடைய கோபாக்கினையினால், ஜலப்பிரளயத்தின் மூலம் தேவன் அழித்தார்:-

Job 38:8 கர்ப்பத்திலிருந்து உதிக்கிறதுபோல் சமுத்திரம் புரண்டுவந்தபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்?
Job 38:9 மேகத்தை அதற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடவையாகவும் நான் உடுத்தினபோதும்,

Job 38:10 நான் அதற்கு எல்லையைக் குறித்து, அதற்குத் தாழ்ப்பாள்களையும் கதவுகளையும் போட்டு:
Job 38:11 இம்மட்டும் வா, மிஞ்சி வராதே; உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக்கடவது என்று நான் சொல்லுகிறபோதும் நீ எங்கேயிருந்தாய்?

Job 38:12 துஷ்டர்கள் பூமியிலிருந்து உதறிப்போடப்படும்படிக்கு, அதின் கடையாந்தரங்களைப் பிடிக்கும்பொருட்டு,
Job 38:13 உன் ஜீவகாலத்தில் எப்போதாவது நீ விடியற்காலத்துக்குக் கட்டளை கொடுத்து, அருணோதயத்துக்கு அதின் இடத்தைக் காண்பித்ததுண்டோ?

Job 38:14 பூமி முத்திரையிடப்பட்ட களிமண்போல் வேறே ரூபங்கொள்ளும்; சகலமும் வஸ்திரம் தரித்திருக்கிறது போல் காணப்படும்.
Job 38:15 துன்மார்க்கரின் ஒளி அவர்களை விட்டு எடுபடும்; மேட்டிமையான புயம் முறிக்கப்படும்.

Job 38:16 நீ சமுத்திரத்தின் அடித்தலங்கள்மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில் உலாவினதுண்டோ?
Job 38:17 மரணவாசல்கள் உனக்குத் திறந்ததுண்டோ? மரண இருளின் வாசல்களை நீ பார்த்ததுண்டோ?

Job 38:18 நீ பூமியின் விசாலங்களை ஆராய்ந்து அறிந்ததுண்டோ? இவைகளையெல்லாம் நீ அறிந்திருந்தால் சொல்லு.
Job 38:19 வெளிச்சம் வாசமாயிருக்கும் இடத்துக்கு வழியெங்கே? இருள் குடிகொண்டிருக்கும் ஸ்தானமெங்கே?

Job 38:20 அதின் எல்லை இன்னதென்று உனக்குத் தெரியுமோ? அதின் வீட்டுக்குப்போகிற பாதையை அறிந்திருக்கிறாயோ?
Job 38:21 நீ அதை அறியும்படி அப்போது பிறந்திருந்தாயோ? உன் நாட்களின் தொகை அவ்வளவு பெரிதோ?

Job 38:22 உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல்மழையிருக்கிற பண்டசாலைகளைப் பார்த்தாயோ?
Job 38:23 ஆபத்து வருங்காலத்திலும், கலகமும் யுத்தமும் வருங்காலத்திலும், பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்துவைத்திருக்கிறேன்.

Job 38:24 வெளிச்சம் பரவப்படுகிறதற்கும், கீழ்காற்று பூமியின்மேல் வீசுகிறதற்குமான வழி எங்கே?

Job_38:1-10, Job_38:11-20, Job_38:21-28, Job_38:29-38, Psa_74:1-8, Gen_6:1-7,Gen_6:8-13, Gen_7:10-16, Gen_7:17-24; Gen_8:1-7, Gen_8:8-16,Gen_8:17-22,
2Pe_3:5-7; Gen_1:1-8; Gen_1:9-14, Gen_1:15-21,Gen_1:22-27, Gen_1:28-31,

Gen_2:1-6,  2Pe_2:4-9, Jud_1:6-10,,Mat_25:41;Job_4:17-18; 1Co_6:1-5,

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தொன்று

# உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

## பொருளடங்கம்-3

3-0 உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராகிய கிறிஸ்து, மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்து, தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிகளுக்காக பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று:-.

3-1 உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராகிய கிறிஸ்து, மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்து, தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிகளுக்காக பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று:-.

Col 1:12 ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்,
Col 1:13 இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

Col 1:14 [குமாரனாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.
Col 1:15 அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

Col 1:16 ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும்,

சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

Col 1:17 அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.
Col 1:18 அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

Col 1:19 சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,
Col 1:20 அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

Col 1:21 முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்.

Col 1:22 நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்.

Col 1:23 அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்.

Rev_5:1-7,Rev_5:8-12, Rev_5:13-14, Col_1:12-17, Col_1:18-22,Eph_1:17-23,Eph_3:9-15;Eph_3:16-19; Phi_2:5-11; Heb_2:1-6; Heb_2:7-12;Heb_2:13-16; Heb_12:22-24; Rev_7:9-12, Rev_19:1-6,

3-2 யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான்..

Joh 1:28 இவைகள் யோர்தானுக்கு அக்கரையில் யோவான் ஞானஸ்நானங்கொடுத்த பெத்தாபராவிலே நடந்தன.
Joh 1:29 மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.

Joh 1:30 எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான்.

Joh 1:31 நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கவந்தேன் என்றான்.

Joh 1:32 பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன்.
Joh 1:33 நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்.

Joh 1:29-30; Joh 1:36; Isa 53:1-6; Isa 53:7-11;Act 8:30-32; 1Pe 1:19; Rev 5:6, Rev 5:8, Rev 5:12-13, Rev 6:1, Rev 6:16; Rev 7:9-10, Rev 7:14, Rev 7:17,

Rev 12:11, Rev 13:8, Rev 14:1, Rev 14:4, Rev 14:10, Rev 15:3, Rev 17:14, Rev 19:7, Rev 19:9; Rev 21:9, Rev 21:14, Rev 21:22-23, Rev 21:27, Rev 22:1-3

Hos 14:1-2; Mat 20:28; Act 13:39; 1Co 15:3-7; 2Co 5:21; Gal 1:1-4; Gal 3:13; 1Ti 2:6; Tit 2:13-14; Heb 1:1-3, Heb 2:16-17, Heb 9:28; 1Pe 2:24, 1Pe 3:18; 1Jo 2:2, 1Jo 3:5, 1Jo 4:10; Rev 1:5

3-3 உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராகிய இயேசு கிறிஸ்துவானவர், பிதாவினிடத்தில் ஆதியிலே வார்த்தையாக இருந்தபோது கிறிஸ்துவிற்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது பிதாவானவரிடத்தில் மீண்டும் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்:-

உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராகிய இயேசு கிறிஸ்துவானவர், தன்னை அனுப்பினவராகிய பிதாவின் சித்தம்

செய்யும்படி, பிதாவானவர் நியமித்த கிரியையைச் செய்து முடித்து, ஜெயங்கொண்டபடியால்; ஒன்றான மெய்த்தேவனாகிய நித்திய சத்தியமுள்ள பிதாவானவர் மூலம்,

ஆட்டுக்குட்டியானவராகிய இயேசு கிறிஸ்துவின், கலியாணமாகிய பட்டாபிஷேக விழாவில் இராஜாவாக முடிசூட்டப்பட்டு; உலகம் உண்டாகிறதற்கு முன்னே பிதாவினிடத்தில் வார்த்தையாகிய கிறிஸ்துவிற்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது பிதாவானவரிடத்தில் மீண்டும் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்.

Joh 17:1 இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:

**Joh 17:2** பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.

Joh 17:3 ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.

Joh 17:4 பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்.

Joh 17:5 பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.

Php 2:5 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;

Php 2:6 அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

Php 2:7 தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.

Php 2:8 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

Php 2:9 ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,
Php 2:10 இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,

Php 2:11 பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

Joh_17:1-5, Joh_17:6-10, Joh_17:11-15, Joh_17:16-22, Joh_17:23-26,Joh_4:32-38, Joh_1:18, Joh_3:13, Joh_10:30, Joh_14:9; Pro_8:22-31; Col_1:12-17; Heb_1:1-3, Phi_2:5-11; Rev_5:1-7,Rev_5:8-12, Rev_5:13-14,Rev_4:1-5,Rev_4:6-8, Rev_4:9-11,

3-4 ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தாகிய தேவனுடைய சத்தியமான வசனங்களை புசித்து, பரிசுத்த ஆவியானவர் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவனுடைய சித்தத்தில் நியமித்த கிரியையைச் செய்து முடித்து,மணவாட்டி சபையாக ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ; ஆட்டுக்குட்டியானவரின் சிங்காசனத்தில் உட்காரும்படிக்கு அருள்செய்கிறார்:- .

Rev 3:14 லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது;

Rev 3:15 உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.
Rev 3:16 இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்.

Rev 3:17 நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்;

Rev 3:18 நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே

வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.

Rev 3:19 நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.

Rev 3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.

Rev 3:21 நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.
Rev 3:22 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.

Rev_3:14-18, Rev_3:19-22, Rev_19:1-6, Rev_19:7-10; Rev_19:11-16, Luk_19:11-16, Luk_19:17-22; Luk_19:23-27, Mat_22:1-7, Mat_22:8-14, Luk_14:7-11, Luk_14:8-12; Luk_14:13-18, Luk_14:19-24; 1Sa_8:7; Psa_2:1-3; ,

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தொன்று

## உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

## பொருளடங்கம்-4

4-0-0 பிதாவின் சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக: பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு , தேவனுடைய சத்தியத்தைக் குறித்து சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்:-

4-1-0 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில்; பரலோகத்திலே பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்:-

4-1-1 பிதா = ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்
4-1-2 வார்த்தை= ஆதியிலே தேவனிடத்திலிருந்த, வார்த்தையாகிய கிறிஸ்து
4-1-3 பரிசுத்த ஆவி = தேவனுடைய ஆவியாகிய பரிசுத்த ஆவி

4-2-0 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில்; பூலோகத்திலே, பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது.

4-2-1 ஆவி / இயேசு கிறிஸ்துவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாண த்தின் ஆவியும், மனிதனுடைய சரீர அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவம், மரணம் ஆகியவைகளின் பிரமாணத்தின் ஆவியும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது.

4-2-2 ஜலம் / இயேசு கிறிஸ்துவினுடைய ஆத்துமாவின் ஜலமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளின் பிரமாணமும், மனிதனுடைய ஆத்துமாவின் ஜலமாகிய மாயைகளுடைய வார்த்தைகளின் பிரமாணமும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது.

4-2-3 இரத்தம் / இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திலான சரீரத்தின் மூலம் மாம்சத்திலே பாவப்பிரமாணத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதினால் வருகிற /மாறுகிற நீதியின் பிரமாணத்தினுடை வழிமுறைகளும், மனிதனின் இரத்தத்திலான சரீரத்தின் மூலம் மாம்சத்திலே பாவப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதினால் வருகிற /மாறுகிற பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினுடைய வழிமுறைகளும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது.

1Jn 5:5 இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று
விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?
1Jn 5:6 இயேசு கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும்
வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும்
வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே
சாட்சிகொடுக்கிறவர்.

1Jn 5:7 [பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை,
பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;
1Jn 5:8 பூலோகத்திலே] சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம்,
இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது.

1Jn 5:9 நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால்,
அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது; தேவன்
தமது குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே.

1Jn 5:10 தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச்
சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; தேவனை
விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த
சாட்சியை விசுவாசியாததினால், அவரைப் பொய்யராக்குகிறான்.

1Jn 5:11 தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன்
அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.
1Jn 5:12 குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய
குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.
1Jn 5:13 உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும்,
தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும்,
தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு
இவைகளை எழுதியிருக்கிறேன்.

1Jo_5:5-10, Joh_17:1-7, Joh_17:8-12,Joh_17:13-20, Joh_17:21-26, Joh_16:1-8, Joh_16:9-16, Joh_15:26-27,Joh_14:16-21, Joh_16:17-21,Joh_16:22-28,1Pe_1:10-13; Joh_14:22-26,Gen_3:22-24,Gen_2:7-15,

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தொன்று

## உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

## பொருளடங்கம்-5

5-0 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: பரலோகத்திலும் பூலோகத்திலும் எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில் சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, சாட்சியிடுகிறவர்களில், மூவரில் முதலாவது வெளிப்பட்ட வார்த்தையாகிய கிறிஸ்துவானவர் : ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளை , கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிறபோது. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது:-

5-1 ஆவி / இயேசு கிறிஸ்துவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் ஆவியும், மனிதனுடைய சரீர அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவம், மரணம் ஆகியவைகளின் பிரமாணத்தின் ஆவியும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது.

5-2 ஜலம் / இயேசு கிறிஸ்துவினுடைய ஆத்துமாவின் ஜலமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளின் பிரமாணமும், மனிதனுடைய ஆத்துமாவின் ஜலமாகிய மாயைகளுடைய வார்த்தைகளின் பிரமாணமும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது.

5-3 இரத்தம் / இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திலான சரீரத்தின் மூலம் மாம்சத்திலே பாவப்பிரமாணத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதினால் வருகிற /மாறுகிற நீதியின் பிரமாணத்தினுடை வழிமுறைகளும், மனிதனின் இரத்தத்திலான சரீரத்தின் மூலம் மாம்சத்திலே பாவப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதினால் வருகிற /மாறுகிற பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினுடைய வழிமுறைகளும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது.

5-4 பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்தவன்/ புதிய மனுஷனுடைய ஆவி,ஆத்துமா, சரீர அவயவங்கள் இம்மூன்றும் ஒருமைப்பட்டிருந்து, ஐக்கியமாக இருக்கிறபடியால்; பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனையும், சத்திய ஆவியாகிய தேற்றரவாளனையும் பெற்றுக்கொள்ளுகிறதற்கு தகுதியுள்ளவனாக மாறுகிறான்:-

1Jn 5:5 இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?
1Jn 5:6 இயேசு கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர்.

1Jn 5:7 [பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;
1Jn 5:8 பூலோகத்திலே] சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது.

1Jn 5:9 நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது; தேவன் தமது குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே.

1Jn 5:10 தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரைப் பொய்யராக்குகிறான்.

5-1 ஆவி / இயேசு கிறிஸ்துவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் ஆவியும், மனிதனுடைய சரீர அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவம், மரணம் ஆகியவைகளின் பிரமாணத்தின் ஆவியும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது:-

இயேசு கிறிஸ்துவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் மூலம், பூமிக்குரிய மாம்சத்தின்படி பிறந்தவன்/ பழைய மனுஷன்/ ஜென்மசுபாவமான மனுஷனுடைய ஆவியின் மரணத்தினால்; ஜென்ம சுபாவமான மனுஷனுடைய பாவம், மரணம் ஆகியவைகளின் பாவப்பிரமாணத்தின் வல்லமைகளை, ஜெயங்கொள்ளுகிறபோது:

பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்தவன்/ புதிய மனுஷன் / ஆவிக்குரிய சுபாவமான மனுஷனுடைய ஆவி தேவனுடைய நீதியின் பிரமாணத்திற்கு விரோதமாக வருகிற பாவங்களை குறித்து கண்டித்து உணர்த்தப்பட்டு, பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்த ஒருமனப்படுகிறது.

இந்த நிலையில் கிறிஸ்துவின் ஆவியும் மனிதனுடைய ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறதற்கு பதிலாக: கிறிஸ்துவின் ஆவியானவர் பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்த புதிய மனுஷனை ஆவியிலே உயிர்ப்பித்து, புதிதாகிறதினாலே ஆவியில் மறுரூபத்தை உண்டாக்குகிறார்; இப்படி பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்த புதிய மனுஷனுடைய ஆவி தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்து / சஞ்சரித்து பரலோகராஜ்யத்தின் உவமைகளின் ரகசியங்களை அறிந்து கொள்ளுகிறான். .

Rom_7:14-20, Rom_7:21-25,Rom_8:1-5, Rom_8:6-10, 1Co_2:11-16,Gal_4:22-27, Gal_4:28-31, Eph_4:21-24, Rom_6:6; Col_3:9-10,Rev_1:18,Psa_49:11-15, Job_14:19-22, Job_20:23-29, Job_33:15-20; Job_33:21-28; Job_33:29-33; Psa_16:8-11, Act_2:25-28,

5-2 ஜலம் / இயேசு கிறிஸ்துவினுடைய ஆத்துமாவின் ஜலமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளின் பிரமாணமும், மனிதனுடைய ஆத்துமாவின்

ஜலமாகிய மாயைகளுடைய வார்த்தைகளின் பிரமாணமும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது.

கிறிஸ்துவினுடைய ஆத்துமாவின் ஜலமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளின் நன்மை,தீமைகளின் மூலம், பூமிக்குரிய மாம்சத்தின்படி பிறந்தவன்/ பழைய மனுஷன்/ ஜென்மசுபாவமான மனிதனுடைய ஆத்துமாவில் உண்டாயிருக்கிற மாயைகளுடைய வார்த்தைகளின் பிரமாணத்தின் , வல்லமைகளை ஜெயங்கொள்ளுகிறபோது:

பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்தவன்/ புதிய மனுஷன்/ ஆவிக்குரிய சுபாவமான மனிதனுடைய ஆத்துமா, தேவனுடைய நீதியின் பிரமாணத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தப்பட்டு, பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்த ஒருமனப்படுகிறது,

இந்த நிலையில் கிறிஸ்துவின் ஆத்துமாவும், மனிதனுடைய ஆத்துமாவும் ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறதற்கு பதிலாக: கிறிஸ்துவின் ஆத்துமானவர், பரலோகத்திற்குரிய ஆத்துமாவின்படி மறுபடியும் பிறந்த மனிதனுடைய ஆத்துமாவை புதிதாகிறதினாலே மறுரூபமடைந்து பரிசுத்த ஆவியையும்,சத்திய ஆவியையும்,சுதந்தரித்துக்கொண்டு தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்து /சஞ்சரித்து பரலோகராஜ்யத்தின் உவமைகளின் ரகசியங்களை அறிந்து கொள்ளுகிறது.

Isa_11:9; Hab_2:14;Heb_5:12-14, Heb_6:1-2,Rom_10:6-10;Deu_29:1-6, Deu_29:7-12, Deu_29:13-18, Deu_29:19-24, Deu_29:25-29, Deu_30:1-6,Deu_30:7-12, Deu_30:13-18, Deu_30:19-24, Deu_31:1-6, Deu_31:7-13, Deu_31:14-19, Deu_31:20-26, Deu_31:27-30, Deu_32:1-7, Deu_32:8-14, Deu_32:15-20, Deu_32:21-26, Deu_32:27-34, Deu_32:35-40, Deu_32:41-46, Deu_32:47-52, Eze_22:26-30, Eze_44:21-23; Lev_10:1-3, Lev_10:8-11,

5-3 இரத்தம் / இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திலான சரீரத்தின் மூலம் மாம்சத்திலே பாவப்பிரமாணத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதினால் வருகிற /மாறுகிற நீதியின் பிரமாணத்தினுடை வழிமுறைகளும், மனிதனின் இரத்தத்திலான சரீரத்தின் மூலம் மாம்சத்திலே பாவப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதினால் வருகிற /மாறுகிற பாவம்

மரணம் என்பவைகளின் பிரமாணத்தினுடைய வழிமுறைகளும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறது.

இயேசு கிறிஸ்து அநேகருக்காக பாவமன்னிப்புண்டாகும்படி சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய இரத்தமாயிருக்கிற மாம்சத்திலே பாவத்தைப் பலியாக செலுத்தி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும் வழிமுறைகளின் மூலம். பூமிக்குரிய மாம்சத்தின்படி பிறந்தவன்/ பழைய மனுஷன்/ ஜென்மசுபாவமான மனுஷனுடைய சரீரத்தின் மாம்சத்திலே, பாவத்தைப் ஜீவபலியாக செலுத்தி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும் வழிமுறைகளின் மூலம். பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின் வல்லமைகளை, ஜெயங்கொள்ளுகிறபோது:

பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்தவன்/ புதிய மனுஷன் / ஆவிக்குரிய சுபாவமான மனுஷனுடைய சரீரத்தின் மாம்சத்திலே தேவனுடைய நியாயத்தீர்ப்பின் பிரமாணத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தப்பட்டு, பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்த ஒருமனப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திலான சரீரத்தின் மூலம் மாம்சத்திலே பாவப்பிரமாணத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதினால் வருகிற /மாறுகிற நீதியின் பிரமாணத்தினுடை வழிமுறைகளும், மனிதனின் இரத்தத்திலான சரீரத்தின் மூலம் மாம்சத்திலே பாவப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதினால் வருகிற /மாறுகிற பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினுடைய வழிமுறைகளும், ஒன்றுக்கொன்று விரோதமாக இச்சித்து போராடுகிறதற்கு பதிலாக:

கிறிஸ்துவின் மாம்சமும் சரீரமும் உயிர்த்தெழுந்ததுபோல புதிய மனுஷனின் மாம்சமும் சரீரமும் உயிர்த்தெழுந்து புதிதாகிறதினாலே மறுரூபமடைந்து புதிய மனுஷனுடைய சரீர அவயவங்களில் நீதியின் பிரமாணத்தினுடை வழிமுறைகள் பிரவேசித்து /சஞ்சரித்து பரலோகராஜ்யத்தின் ரகசியங்களுடைய நீதியின் கிரியைகளை நிறைவேற்றுவதில் பிரதிபலித்து வெளிப்படுகிறது.

5-4 பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்தவன்/ புதிய மனுஷனுடைய ஆவி,ஆத்துமா, சரீர அவயவங்கள் இம்மூன்றும் ஒருமைப்பட்டிருந்து, ஐக்கியமாக இருக்கிறபடியால்; பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ள தகுதியுள்ளவனாக மாறுகிறான்:-

1 பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சத்தியம் என்னும் கச்சையை தங்கள் அரையில் கட்டினவர்களாக இருக்க வேண்டும்,

2 பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாக இருக்க வேண்டும்,

3 பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாக இருக்க வேண்டும்,

4 பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர் களாகும்படியும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப்போடத்தக்கதாயும் , தேவனுடைய விசுவாசமென்னும் கேடகத்தைப் எல்லாவற்றிற்கும் மேலாக பிடித்துக் கொண்டவர்களாக நிற்க வேண்டும்,

5 பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய இரட்சணியமென்னும் தலைச்சீராவை தரித்தவர்களாக இருக்க வேண்டும்,

6 பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

7 பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் தேவரீர் என்னோடேகூட இருக்கிறபடியால் ; பொல்லாப்புக்குப் பயப்படாமல் இருப்பதற்காக தேவனுடைய ஊழியத்தின் கோலாகிய பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் என்னைத் தேற்றுகிறார்.

8 பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் தேவரீர் என்னோடேகூட இருக்கிறபடியால் ; பொல்லாப்புக்குப் பயப்படாமல் இருப்பதற்காக; தேவனுடைய நியாத்தீர்ப்பின் தடியாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் என்னைத் தேற்றுகிறார்.

பூமிக்குரிய மாம்சத்தின்படி பிறந்தவன்/ பழைய மனுஷன்/ ஜென்மசுபாவமான மனுஷனுடைய சரீரத்தின் மாம்சத்திலே, பாவத்தைப் ஜீவபலியாக செலுத்தி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும் வழிமுறைகளின்/ அன்றாட பலியாகிய பாவத்தைப் ஜீவபலியாக செலுத்துகிறதன் மூலம். பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின் வல்லமைகளை, ஜெயங்கொள்ளுகிறபோது:

முதலாவது பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்தவன்/ புதிய மனுஷனுடைய ஆவி,ஆத்துமா, மறுரூபமடைந்து ஜீவனோடிருக்கும், இரண்டாவது ஆவி,ஆத்துமாவின் குணாதிசியங்களுக்கேற்ப சரீர அவயவங்களில் நீதியின் கிரியைகளை நிறைவேற்றுவதில் பிரதிபலித்து வெளிப்படுகிறது.

இந்த நிலையில் பரலோகத்திற்குரிய ஆவியின்படி பிறந்தவன்/ புதிய மனுஷனுடைய ஆவி,ஆத்துமா, சரீர அவயவங்கள் இம்மூன்றும் ஒருமைப்பட்டிருந்து, ஐக்கியமாக இருக்கிறபடியால்; பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனையும், சத்திய ஆவியாகிய தேற்றரவாளனையும் பெற்றுக்கொள்ளுகிறதற்கு தகுதியுள்ளவனாக மாறுகிறான்

Psa 23:1 கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.
Psa 23:2 அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

Psa 23:3 அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.
Psa 23:4 நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

Psa 23:5 என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.
Psa 23:6 என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்- தலைப்பு இருபத்தொன்று

## உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானவரின் சாட்சிகள்.

## பொருளடங்கம்-6

6-0 ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: பரலோகத்திலும் பூலோகத்திலும் எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில் சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, சாட்சியிடுகிறவர்களில், மூவரில் இரண்டாவது வெளிப்பட்ட பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. மூன்று காரியங்கள்:-

6-1 பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. முதலாவது காரியம்: முன்மாரி மழை/ பின்மாரி மழையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படியே பகிர்ந்து கொடுக்கிற பரிசுத்த ஆவியின் வரங்களுடைய ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணங்கள்:-

பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்கள்: முதலாவது முன்மாரி மழை/ பின்மாரி மழையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படியே பகிர்ந்து கொடுக்கிற பரிசுத்த

ஆவியின் வரங்களையும், பரிசுத்த ஆவியின் ஊழியங்களையும், பரிசுத்த ஆவியின் கிரியைகளிலேயும், அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிற ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணங்களின்படி சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்.

பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்களின் மூலம்;

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளியை, இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன்: இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்;

தங்களுடைய இருதயங்களிலே பிரகாசிக்கிற அந்த ஒளியை; இருளாகாதபடிக்கு தேவனுடைய பிரமாணங்களின் மூலம் எச்சரிக்கையாயிருந்து, பாதுகாத்துக்கொண்டு, நீதியின் கிரியைகளை செய்கிறவர்கள்; இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொண்டு ,

முன்மாரி மழை/ பின்மாரி மழையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படியே பரிசுத்த ஆவியின் வரங்களையும், பரிசுத்த ஆவியின் ஊழியங்களையும், பரிசுத்த ஆவியின் கிரியைகளிலேயும், அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிற ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணங்களின்படி சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்.

Act_1:8,1Co_12:7-12, Rom_12:6; 1Co_12:4, 1Co_7:7, 1Co_7:17; Joh_3:27; 1Co_12:8-12,Rom_12:1-6, 2Pe_1:16-21 ,Rev_22:13-16,Rev_2:26-29,Isa_8:11-16,Isa_8:17-20,Job_38:12-15, Act_1:3-8; 2Co_3:1-6; 2Co_3:7-12; 2Co_3:13-18; 2Co_4:1-6; Joh_1:1-5;Joh_1:9-14; Joh_3:19-21 , 1Jo_2:7-10 ,1Co_14:1-6, 1Co_14:21-25;Rom_12:1-6; 1Pe_4:10-11; Mat_3:16-17,Mar_1:10-12, Luk_3:21-23, Mat_17:1-6; Mar_9:2-8; Luk_9:29-36,

6-2 பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்களின் மூலம்: கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. இரண்டாவது காரியம்:

தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் தேவனுடைய சித்தத்தினால், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசின வேதத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களில் மறைக்கப்பட்டிருக்கிற பொருளையும், அதின் அர்த்தத்தையும், தேவன் வெளிப்படுத்துகிறார்:-

பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்களின் மூலம்:

தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் தேவனுடைய சித்தத்தினால், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசின வேதத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களில் மறைக்கப்பட்டிருக்கிற பொருளையும், அதின் அர்த்தத்தையும்,

ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும், உவமைகளினால் சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தைகளில் அடைங்கியுள்ள உலகத்தோற்றம் முதல் உள்ள மறைபொருளானவைகளையும்,

பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுத்த தேவனுடைய ஊழிய அழைப்பை நிறைவேற்றுவதற்காக, தேவனுடைய சத்தியமான வசனங்களையும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தாக இருதயங்களிலே வெளிப்படுத்துகிறார்.

1Pe_4:10, 1Co_14:12-17,1Co_13:8-13; Joh_14:22-26,Mat_10:16-20; Mar_13:9-11; Luk_12:10-12, Luk_21:12-15,Joh_3:27; Eph_6:19-20; Jam_1:5,Isa_50:4;

Joh_20:19-23,Joh_2:20-22, Joh_12:15-16; Act_11:10-16,Act_1:8,Rev_1:4-8, Act_7:51, Act_1:8,Act_2:4, Act_2:32-33, Act_4:8-10, Act_4:28-31, Act_5:32, Act_6:3, Act_6:5-7, Act_7:55, Act_9:17, Act_9:31, Act_10:38, Act_10:44-46 , Act_10:47-48,

6-3 பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்களின் மூலம்: கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. மூன்றாவது காரியம்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற மனுஷகுமாரனுடைய வருகையின் அந்த நாளையும் அந்த

நாழிகையையும், மட்டும் வெளிப்படுத்தாமல், தீர்க்கதரிசனங்களுடைய காலங்களையும் வேளைகளையும், தேவன் வெளிப்படுத்துகிறார்.

பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்களின் மூலம்: கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. மூன்றாவது காரியம்:பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசின. தீர்க்கதரிசனங்களின் மூலமாக; பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே முன் தீர்மானிக்கப்பட்டு, வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும், அவைகளுக்கு பிதாவானவர் நியமித்த எல்லைகளையும், தேவன் வெளிப்படுத்துகிறார்

பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்களின் மூலம்,

பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே மறைவானவைகளாக வைத்திருக்கிற, மனுஷகுமாரன் தம்முடைய தூதரோடுங்கூட வருகிற அந்த நாளையும் அந்த நாழிகையையும், மனிதர்களுக்கும் பரலோகத்திலுள்ள தூதர்களுக்கும் வெளிப்படுத்தப்படவில்லை: ஆனால்

தேவனால் முன்குறிக்கப்பட்டவர்களுக்கு பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே முன் தீர்மானிக்கப்பட்டு, வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும், அவைகளுக்கு பிதாவானவர் நியமித்த எல்லைகளையும்,

தேவனால் தங்களுக்கு அருளப்பட்டவைகளை பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி நிகழ்காலம், கடந்தகாலம், மற்றும் எதிர்காலம் தொடர்புடைய காரியங்கள் எல்லாவற்றையும் போதித்து, தேவன் வெளிப்படுத்துகிறார்

Act_1:3-8;Act_17:26; Deu_29:29; Dan_2:21; Mat_24:36; Mar_13:32; Luk_21:24; Eph_1:10; 1Th_5:1-2; 1Ti_6:15; 2Ti_3:1,

பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசின.

தீர்க்கதரிசனங்களின் மூலமாக; பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே முன் தீர்மானிக்கப்பட்டு, வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும், அவைகளுக்கு பிதாவானவர் நியமித்த எல்லைகளையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் தேவன் வெளிப்படுத்துகிறார்.

Amo_3:1-5;Amo_3:6-10;Isa_41:21-24, Job_24:1-6, Job_24:7-13, Ecc_8:1-4; 2Co_4:4-6; Ecc_8:5-7; Ecc_9:1; Ecc_8:14-15;Ecc_9:7-12; Ecc_9:13-18; Ecc_9:2-6; Joh_10:33-38, Isa_41:25-29; Isa_48:12-17, Rev_19:9-10, 1Co_2:5-10, 1Co_2:11-16, Isa_65:13-15, Isa_66:1-2,Mal_3:13-18,Heb_5:12-14,Jer_23:18-24, Luk_11:33-36, 1Ki_22:19-23; 2Ki_6:12, 2Ki_22:20; Psa_25:14; Dan_9:22-27,Joh_15:15; Rev_1:1, Rev_1:19, Rev_4:1;

1Pe 1:3 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக;
1Pe 1:4 அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

1Pe 1:5 கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.
1Pe 1:6 இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

1Pe 1:7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

1Pe 1:8 அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து,
1Pe 1:9 உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்.

1Pe 1:10 உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்;

1Pe 1:11 தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.

1Pe 1:12 தங்கள்நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.

1Pe 1:13 ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

1Jo_5:5-10, Joh_1:1-5,Joh_1:12-14, 1Pe_1:10-13; Rev_19:9-10,Rev_1:4-8, 2Pe_1:16-21, Joh_1:1-5,Joh_1:12-14,Gal_4:1-6; Phi_1:17-19; 1Pe_1:3-8,1Pe_1:9-13,Rom_8:1-6; Rom_8:7-12; Rom_8:13-18; Isa_56:5; Jer_3:19; Hos_1:10; Rom_8:14; 2Co_6:17-18; Gal_3:26, Gal_4:6; 2Pe_1:1-7; 2Pe_1:8-12; 1Jo_3:1-6,1Jo_3:7-12,1Jo_3:13-18,1Jo_3:19-24,

ஒன்றான மெய்த்தேவனாகிய பிதாவின் நித்திய சத்தியம்: பரலோகத்திலும் பூலோகத்திலும் எந்த விதத்திலும் தீட்டுப்படாதபடிக்கு, தனக்கும் தன்னுடைய சர்வ சிருஷ்டிக்கும் மத்தியில் சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக, சாட்சியிடுகிறவர்களில், மூவரில் இரண்டாவது வெளிப்பட்ட பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. கிழே குறிப்பிட்ட இந்த மூன்று காரியங்களும் பரலோகத்திலும் பூலோகத்திலும் பிதாவின் நித்திய சத்தியத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்காக ஒன்றாயிருக்கிறது / ஒன்றாயிருக்கிறார்கள்;

1 பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. முதலாவது காரியம்: முன்மாரி மழை/ பின்மாரி மழையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் தமது சித்தத்தின்படியே பகிர்ந்து கொடுக்கிற பரிசுத்த ஆவியின் வரங்களுடைய ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணங்கள்:-

2 பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்களின் மூலம்: கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. இரண்டாவது காரியம்: தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் தேவனுடைய சித்தத்தினால், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசின வேதத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களில் மறைக்கப்பட்டிருக்கிற பொருளையும், அதின் அர்த்தத்தையும், தேவன் வெளிப்படுத்துகிறார்:-

3 பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை பெற்றுக்கொள்ளுகிறவர்களின் மூலம்: கண்டித்து உணர்த்தி சாட்சியிடுகிற. மூன்றாவது காரியம்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற மனுஷகுமாரனுடைய வருகையின் அந்த நாளையும் அந்த நாழிகையையும், மட்டும் வெளிப்படுத்தாமல், தீர்க்கதரிசனங்களுடைய காலங்களையும் வேளைகளையும், தேவன் வெளிப்படுத்துகிறார்

Joh_7:37-40,Joh_14:22-26,Isa_44:1-3,Pro_5:13-20,Pro_18:4; Pro_20:5;Pro_10:11,Joh_14:22-26,Isa_3:1, Lev_26:25-26; Eze_4:17, Eze_14:13,

6-4 பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே முன் தீர்மானிக்கப்பட்டு, வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும், அவைகளுடைய எல்லைகளின், நிகழ்காலம், கடந்தகாலம், மற்றும் எதிர்காலம் தொடர்புடைய மாயைகளின் நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொண்டு, ஜீவவாழ்வாக அநுபவித்து வாழ்வதற்கு; தேவனுடைய கட்டளைகள்:-

சூரியனுக்குக் கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற நிலையில்லாத இந்த மாயையான நாட்களிலெல்லாம், நீ நேசிக்கிற உன் இளவயதின் மனைவியாகிய உடன்படிக்கையில் நிலைத்திருந்து ஜீவவாழ்வை அநுபவித்து வாழ்வதற்கு; தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களை, நித்திய ஜீவனுடைய நாட்களாக மாற்றியமைத்துக் கொள்ளுவதற்கு, தேவனுடைய சமயமும் தேவச்செயலும் நேரிடவேண்டும்

Ecc 9:7 நீ போய், உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி; தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம்பண்ணியிருக்கிறார்.

Ecc 9:8 உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக.

Ecc 9:9 சூரியனுக்குக்கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே.

Ecc 9:10 செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே.

Ecc 9:11 நான் திரும்பிக்கொண்டு சூரியனுக்குக் கீழே கண்டதாவது: ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது; பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது; ஐசுவரியம் அடைகிறதற்குப் புத்திமான்களின் புத்தியும் போதாது; தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது; அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச்செயலும் நேரிடவேண்டும்.

Ecc_8:1-4; 2Co_4:4-6; Ecc_8:5-7; Ecc_9:1; Ecc_8:14-15;Ecc_9:7-12; Mal_2:1-5;Mal_2:6-10;Mal_2:11-15;Mal_2:16-17;Pro_5:13-23,Ecc_9:13-18;1Co_14:1-5;

1Co_14:6-10; 1Co_14:11-15; 1Co_14:16-20; 1Co_14:21-25; 1Co_14:26-30;

1Co_14:31-33;Rom_12:1-6; 1Co_14:21-25; Isa_28:11-15; Isa_28:16-21;Isa_8:5-10, Isa_8:11-15;Isa_8:16-22,Isa_30:28, Ecc_9:1-6; Joh_10:33-38, Isa_41:25-29;

Isa_48:12-17, Act_1:3-8;Act_17:26; Amo_3:1-5;Amo_3:6-10;Isa_41:21-24, Job_24:1-6, Job_24:7-13,

6-5 பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனுடைய பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுவதற்கு தேவையான அடிப்படை தகுதிகள்:-

ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்பி,, ஜலமாகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தையினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பி வந்து,ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.

அவர்கள் எருசலேமை விட்டுப் போகாமல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருந்து பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டார்கள்.

Mat 3:11 மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

Act 1:1 தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு,

Act 1:2 அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்.

Act 1:3 அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.

Act 1:4 அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.

Act 1:5 ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.

Act 1:12 அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள்.

Act 2:1 பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.
Act 2:2 அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

Act 2:3 அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.

Act 2:4 அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

Act 2:5 வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள்.

Act 2:6 அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்.

Act 2:7 எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?
